02-04-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 18.02.1994

சுவமானின் நினைவு என்ற ஸ்விட்சை ஆன் செய்வதன் மூலம் தேக உணர்வு என்ற இருளுக்கு முடிவு

இன்று அழியாத (அகால) மூர்த்தியாகிய பாபா அனைத்து அழியாத ஆசனதாரி, உலக நன்மைக் கான கிரீடதாரி, நெற்றியில் ஜொலிக்கின்ற பிந்தியின் திலகதாரி குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு வரும் ஆசனதாரியும் கூட, கிரீடதாரியும் கூட, திலகமும் கூட அனைவருக்கும் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. அனைவரின் நெற்றி நடுவில் ஆத்மா பிந்தி, நட்சத்திரத்தைப் போல் காணப்படுகிறது. நீங்கள் அனைவரும் கூட உங்கள் சிம்மாசனம், கிரீடம் மற்றும் திலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். சபை முழுவதும் பாப்தாதாவுக்கு கிரீடம் மற்றும் திலகதாரி, சிம்மாசனதாரிகளாகக் காட்சி யளிக்கிறார்கள். இந்த அலௌகிக சபை, கலியுக ராஜ்ய சபை மற்றும் சத்யுக ராஜ்ய சபையை விடவும் எவ்வளவு தனிப்பட்டதாக, பிரிய மானதாக உள்ளது! ஆக, அப்படிப்பட்ட சபையின் அதிகாரி ஆத்மாக்கள் எவ்வளவு அன்பானவர் கள்! உங்கள் அனைவருக்கும் கூட இந்த உங்களுடைய ஆசனம், கிரீடம் மற்றும் திலகதாரி சொரூபம் பிரியமானதாக உள்ளது இல்லையா? அழியாத ஆசனத்திற்குரிய, அகாலமூர்த்தி, சிரேஷ்ட ஆத்மா ஸ்திதியில் நிலைத்திருந்து ஆசனத்தில் அமர்கிறீர்கள் என்றால் இந்த ஸ்திதி எவ்வளவு சிரேஷ்டமானது! அனைவருடைய சிரேஷ்ட ஸ்திதியின் ஜொலிப்பானது இந்த முகத் தோற்றத்தை ஃபரிஸ்தா ஆக்கி விடுகிறது. சாதாரண முகம் இல்லை, ஃபரிஸ்தாவின் முகம். ஆக, ஃபரிஸ்தாவின் முகத்தோற்றமும் கூட எவ்வளவு பிரியமானதாக உள்ளது! ஃபரிஸ்தாக்கள் அனைவருக்குமே மிகவும் பிரியமானவர்களாக உள்ளனர். ஏனென்றால் ஃபரிஸ்தா அனைவருக் குமானவராக இருக்கிறார். ஒருவர்-இருவருக்கானவர் இல்லை. எல்லையற்ற திருஷ்டி, எல்லை யற்ற உள்ளுணர்வு, எல்லையற்ற ஸ்திதி உள்ளவர் ஃபரிஸ்தா. ஃபரிஸ்தா அனைத்து ஆத்மாக் களுக்காகவும் பரமாத்ம செய்தி கொண்டு வருபவர். ஃபரிஸ்தா என்றால் சதா பறக்கும் கலையில் இருப்பவர். ஃபரிஸ்தா என்றால் அனைவரின் உறவை ஒரு பாபாவோடு இணைப் பவர். ஃபரிஸ்தா என்றால் டபுள் லைட். தேகம் மற்றும் தேக சம்பந்தங்களில் இருந்து விடுபட்டு விலகியும் லேசாகவும் இருப்பவர். ஃபரிஸ்தா என்றால் அனைவரையும் தனது நடத்தை மற்றும் முகத்தின் மூலமாக பாப்-சமான் ஆக்குபவர். ஃபரிஸ்தா என்றால் சகஜமாக, இயல்பாக அநாதி மற்றும் ஆதி சம்ஸ்காரங்கள் சதா இமர்ஜ் ரூபத்தில் காணப்படுபவர். ஃபரிஸ்தா என்றால் மாசற்ற உணர்வு, பணிவு சுபாவம் மற்றும் அனைவர் மீதும் நன்மையின் சிரேஷ்ட பாவனை உள்ளவர். நீங்கள் அனைவரும் அத்தகைய ஃபரிஸ்தாக்கள் தாம் இல்லையா? பெருமிதத்தோடு சொல்லுங்கள் - நாங்கள் இல்லையென்றால் யார் அது போல் இருப்பார்கள்? பெருமிதம் உள்ளது இல்லையா? ஆக, பாப்தாதா அத்தகைய ஃபரிஸ்தாக்களின் தர்பாரைப் பார்த்துக் கொண்டி ருக்கிறார். இதே சுவமானத்தில் நிலைத் திருப்பதன் மூலம் தேக உணர்வு தானாகவே முடிந்து போய் விடும்.

பாபா பார்க்கிறார் - குழந்தைகள் தேக உணர்வை விடுவதற்கு அதிக முயற்சி செய் கின்றனர். ஒரு தேக உணர்வின் ரூபத்தை விடுகின்றனர் என்றால் இன்னொன்று வந்து விடுகிறது. பிறகு இரண்டாவதை விட்டால் மூன்றாவது வந்து விடுகிறது. ஆனால் விடுவது எப்போதுமே கஷ்ட மாக உள்ளது மற்றும் தாரணை செய்வது சுலபமாக உள்ளது. ஆகவே பாப்தாதா சொல்கிறார் - சதா சுவமானில் இருங்கள். எங்கே சுவமான் உள்ளதோ, அங்கே தேக உணர்வு வரவே முடியாது. எனவே விடுவதற்கு முயற்சி செய்யாதீர்கள். ஆனால் சுவமானில் நிலைத்திருப் பதற்கான கவனம் வையுங்கள். சங்கமயுகத்தில் பாபாவிடமிருந்து எவ்வளவு நல்ல-நல்ல சுவமான்கள் கிடைத்துள்ளன! தன்னுடைய சுவமான்களின் பட்டியலை எடுங்கள். எவ்வளவு பெரிய பட்டியல்! முழுக் கல்பத்திலும் எவ்வளவு தான் சுவமான்கள், அதாவது டைட்டில்கள், எந்த ஒரு பெயர் பெற்ற ஆத்மாவினுடையதாக இருக்கட்டும், அரசியல் தலைவராக இருந்தாலும், நடிகராக இருந்தாலும், தர்மாத்மாவாக இருந்தாலும், மகான் ஆத்மாவாக இருந்தாலும் சரி, அவர்களின் டைட்டில்களின் எண்ணிக்கையைப் பார்த்தாலும், உங்களுடைய சுவமான்களின் பட்டியலை விட அதிகமாக இருக்க முடியுமா? மேலும் தினம் அதிகாலையில் பாப்தாதா சுவமான்களை நினைவு படுத்து கிறார், சுவமான்களில் நிலைத்திருக்கச் செய்கிறார். தினமும் கூட ஒரு புதியதிலும் புதிய சுவமான் ஒன்றை நினைவில் வைப்பீர்களானால் சுவமானுக்கு முன்னால் தேக உணர்வு என்பது, ஒளிக்கு முன்னால் இருள் ஓடி விடுவதைப் போல ஓடிப்போகும். நேரமும் பிடிக்காது, கடின முயற்சியும் தேவைப்படாது. எனவே அடிக்கடி பலவித தேக உணர்வு களை நீக்குவதற்காக ஏன் முயற்சி செய்கிறீர்கள்? சுவமானின் ஸ்மிருதியினுடைய ஸ்விட்சை ஆன் செய்ய வருவதில்லையா என்ன? எவ்வளவு தான் ஆழமான கறுப்பு நிற மேகங்கள் சூரியனை மறைத்தாலும் சரி, உங்களிடம் நேரடியாகப் பரமாத்ம ஒளியின் தொடர்பு உள்ளது. நேரடி (டைரக்ட்) லைன் உள்ளது இல்லையா? லைன் தெளிவாக உள்ளதா அல்லது லீக்கேஜ் (கசிவு) உள்ளதா? சிலருக்கு இணைப்பு கிடைக்கிறது, ஆனால் கசிவு ஏற்பட்டு விடுகிறது. ஆக, டைரக்ட் லைன் எவ்வளவு சக்திசாலியாக உள்ளது! நேரடித் தொடர்பு உள்ளதா அல்லது மறைமுகமானதா? அனைவருக்கும் டைரக்ட் லைன் உள்ளது இல்லையா? எல்லாருக்குமே நேரடி லைன் கிடைத்து விட்டதா? பிறகோ ஒரு மேகம் என்ன, எல்லா மேகங்களும் வந்து விட்டாலும் கூட இருளை உருவாக்க முடியுமா என்ன? ஸ்மிருதியின் ஸ்விட்சை டைரக்ட் லைனிலிருந்து ஆன் செய்து விட்டால், அவ்வளவு லைட் வந்து விடும் - சுயம் ஒளியில் தான் இருப்பீர்கள். ஆனால் மற்றவர்களுக்காகவும் கலங்கரை விளக்கம் (லைட் ஹவுஸ்) ஆகி விடுவீர்கள். அந்த மாதிரி ஆகிறது இல்லையா? நீங்கள் அனுபவிகள் இல்லையா? ஆனால் சில நேரம் அனுபவத்தை ஒதுக்கி வைத்து விடுகிறீர்கள். ஆதரவு கிடைத்துள்ளது, ஆனால் சில நேரம் உதவிக்கு பதிலாக விலகிப்போய் விடுகிறீர்கள். கடின உழைப்பு செய்ய வேண்டி உள்ளதா என்ன? சதா இல்லை, சில நேரம் முயற்சி செய்ய வேண்டி உள்ளது. ஸ்விட்சை ஆன் செய்வதற்கு மறந்து விடுகிறீர்களா என்ன? உண்மையில் ஒரு மாஸ்டர் சர்வசக்திவான் என்ற சுவமான் நினைவிருந்தாலும் கூட கடின உழைப்பின் எந்த ஒரு விஷயமும் இருக்காது. மார்க்கம் கடின உழைப்புக்குரியதன்று. ஆனால் நெடுஞ்சாலையில் செல்வதற்கு பதிலாக சந்துகளில் சென்று விடுகிறீர்கள். அல்லது குறிக்கோளின் இலக்கிலிருந்து விலகி இன்னும் அதிகம் முன்னால் சென்று விடுகிறீர்கள் என்றால் திரும்பி வருவதற்கு முயற்சி செய்ய வேண்டி உள்ளது. பாப்தாதா சதா

தமது அன்பு மற்றும் சகயோகத்தின் மடியில் அமர்த்தி, குறிக்கோளை நோக்கி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார். மடியில் அமர்ந்து குறிக் கோளை அடைவதில் ஏன் கஷ்டமாக உள்ளது? அன்பு மற்றும் சகயோகத்தின் மடியில் இருந்து வெளியில் வருவதால் சில நேரம் மற்ற கவர்ச்சிகள் ஈர்க்கின்றன என்றால் சுற்றிவரக் கிளம்பி விடுகிறீர்கள். களைத்துப்போகவும் செய்கிறீர்கள். பிறகு கடின உழைப்பையும் உணர்கிறீர்கள். ஆக, இந்த வருடம் என்ன செய்வீர்கள்? கடின உழைப்பு முடிந்து போக வேண்டும். அன்பில் மூழ்கி விடுங்கள். மூழ்கி இருந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். யார் மூழ்கி விடுகிறாரோ, அவருக்கு வேறு எதுவும் தென்படாது, கவர்ந்திழுக்காது. ஆக, அன்பில் இருக் கிறீர்கள். எனக்கு பாபாவிடம் அன்பு இல்லை, லவ் இல்லை என்று சொல்பவர் யாராவது இருப்பார்களா? அனைவருக்குமே அன்பு இருக்கிறது இல்லையா? ஆனால் சில நேரம் அன்பில் இருக் கிறீர்கள், சில நேரம் அன்பில் மூழ்கிய நிலையில் இருக்கிறீர்கள். இல்லையென்றால் பாருங்கள், மனம்-புத்தி மூலம் ஸ்திதியில் சர்வ சம்பந்தங்களிலும் பாபாவின் துணை உள்ளது. துணையும் உள்ளது மற்றும் சேவையில் பாபா ஒவ்வொரு சமயமும் துணைவராக உள்ளார். ஆக, ஸ்திதியில் துணையாக இருக்கிறார், சேவையில் துணைவராக இருக்கிறார். எங்கே சதா துணையும் உள்ளது, துணைவரும் இருக்கிறாரோ, அங்கே கஷ்டமானது என்ன உள்ளது? பரம ஆத்மாவின் மகிமையே கடினமானதை எளிதாக ஆக்குபவர் என்பது தான். அந்த மாதிரி பாபா துணையாகவும் துணைவராகவும் இருக்கும் போது கஷ்டம் ஏதேனும் இருக்க முடியுமா? பிறகு ஏன் கடினமாக ஆக்குகிறீர்கள்?

சமயத்தின் பிரமாணம் சுயம் பாபா குழந்தைகளுக்கு சர்வ சம்பந்தங்களிலும் உடனிருப் பதற்கு முன்வருகிறார். எப்படி சமயமோ, அதற்குரிய சம்பந்தத்தில் துணையில் இருங்கள் அல்லது துணைவராக ஆக்கிக் கொள்ளுங்கள். சில சமயமோ, சம்பந்தத்தின் மூலம் துணைவராக்கு கிறீர்கள். சில சமயம் துணைவரை ஒதுக்கி வைத்து விடுகிறீர்கள். பிறகு சொல்கிறார்கள் - தனிமை ஃபீல் ஆகிறது என்று. போகப்போக தனிமை உணர்வு ஏற்படு கிறது. தனிமை வருவதால் என்னவாகிறது? தனது சிரேஷ்ட வாழ்க்கை சாதாரண வாழ்க்கையாக அனுபவம் ஆகிறது. பிறகு வாழ்க்கையே போரிங் ஆகி விட்டது, கொஞ்சம் மாற்றம் வேண்டும் எனச் சொல்கிறார்கள். ஒரு பக்கம் பாப்தாதாவைக் குஷிப் படுத்துகிறார்கள் - நாங்களோ இணைந்தே இருக்கிறோம். இணைந்து இருப்பவர்கள் எப்போதாவது தனியாகி விடுவார்களா என்ன? மிக நல்ல-நல்ல உரையாடல்கள் செய்கிறீர்கள் - பாபா, நாங்களோ உங்களோடு இணைந்தே இருக்கிறோம். பிறகு 15-20 வருடங்கள் கழிந்து விட்டால் சொல்கிறீர்கள் - மாற்றம் வேண்டும், தனிமை ஃபீலாகிறது. அப்படியும் பாருங்கள், உலகத்தில் மாற்றம் விரும்புகின்றனர் என்றால் ஏதாவது கடற்கரையில் போய்த் தூங்கி விடுகிறார்கள். சிலர் மனமகிழ்ச்சிக்கான நிகழ்ச்சிகளில் சென்று விடுகிறீர்கள். நாட்டியமாடுகிறீர்கள், சிலர் பாடல்களின் மகிழ்ச்சியில் மகிழ்ச்சி கொண்டாடுகிறீர்கள். சிலர் கம்பெனி அல்லது கம்பேனியனின் துணையை நாடுகிறீர்கள். இதைத் தான் செய்கிறீர்கள் இல்லையா? விளையாடுகிறீர்களா? விளையாட்டுகளின் உலகத்தில் தோட்டத்தில் சென்று விடுகிறீர்கள். இங்கே ஞானக்கடலின் கரை இருப்பதை மறந்து விடுகிறீர் கள். கடல் பிடித்திருக்கிறது என்றால் கடலின் கரையில் அமர்ந்து விடுங்கள். பாபா ஞானக்கடல் இல்லையா? பாபா கம்பேனியன் இல்லையா என்ன? அவரிடம் மஜா வரவில்லையா?

அல்லது பிந்தியிடம் என்ன மஜா வரும் என நினைக்கிறீர்களா? உங்கள் அனைவரையும் சதா மகிழ்விப் பதற்காக பிரம்மா பாபாவும் அவ்யக்தமாகி விட்டார். இங்கோ சதா காலத்திற்கான துணைவர் வேண்டும் இல்லையா? எப்பொதெல்லாம் தான் தனிமையில் இருப்பதாக அனுபவம் செய்கிறீர் களோ, அச்சமயம் பிந்து ரூபத்தை நினைவு செய்ய வேண்டாம். அது கஷ்டமாகி விடும். அதனால் போரிங் ஆகி விடும். ஆனால் தனது பிராமண வாழ்க்கையின் பல்வேறு சமயங்களின் ரமணீகர அனுபவங்களின் கதைகளை நினைவில் கொண்டு வாருங்கள். அனுபவங்களின் கதைகளின் புத்தகம் அனைவரிடமும் உள்ளது. போரடிக்கும் போது நாவல்கள் படிக்கிறீர்கள் இல்லையா? அப்போது நீங்கள் உங்கள் கதைகளின் புத்தகத்தைத் திறந்து கொள்ளுங்கள். அதைப் படிப்பதில் பிஸியாகி விடுங்கள். உங்கள் சுவமான்களின் பட்டியலை முன்னால் கொண்டு வாருங்கள். தங்களின் பிராப்திகளின் பட்டியலை முன்னால் கொண்டு வாருங்கள். பிராமண உலகத்தின் விசித்திர நடைமுறைக் கதைகளை ஸ்மிருதியில் கொண்டு வாருங்கள். எப்படி தன்னை மாற்றிக் கொள்வதற்காக செய்தித்தாள் படிப்பதற்கான ஆதாரத்தையும் எடுத்துக் கொள்கின்றனர் என்றால் பிராமண உலகத்தின் எத்தனை அலௌகிக செய்திகள் ஆரம்பத் திலிருந்து இப்போது வரை பார்த்திருக்கிறீர்களோ, அல்லது கேட்டிருக்கிறீர்களோ, அந்த செய்திப் பத்திரிகையும் உங்களிடம் உள்ளது. அநேகருக்கு பேப்பர் படிக்காமல் நிம்மதி வராது. பேப்பரும் உங்களிடம் உள்ளது. பேப்பர் படியுங்கள். நாட்டியம் மற்றும் இசை பற்றி அறிந்தே இருக் கிறீர்கள். களைப்பில்லாமல் நடனமாடுங்கள். மன்மனாபவ ஆவது (ஒருவரிடம் மனதை நிலை நிறுத்துவது) தான் அனைத்திலும் அதிகமாக மனதை மகிழ்விப்பதாகும். ஏனென்றால் சர்வ சம்பந்தங்களின் ரசனை அல்லது அனுபவங்களை அடைவது தான் மன்மனாபவ ஆகும். பாபாவின் ரூபத்தில் அல்லது விசேஷமாக மூன்று ரூபங்களின் சம்பந்தத்தில் மட்டும் அனுபவம் இல்லை. ஆனால் சர்வ சம்பந்தங்களின் அன்பை நீங்கள் அனுபவம் செய்ய முடியும். சம்பந்தங்களால் நினைவோ செய்கிறீர்கள். ஆனால் வித்தியாசம் என்ன ஆகி விடுகிறது? ஒன்று, புத்தியால் ஞானத்தின் ஆதாரத்தில் சம்பந்தத்தை நினைவு செய்வது. இரண்டாவது, மனதால் அந்த சம்பந்தத்தின் அன்பில் லவ்லீன் ஆகி விடுவது. பாதி செய்கிறீர்கள் மீதிப் பாதி இருந்து விடுகிறது. அதனால் கொஞ்ச சமயமோ சரியாக இருக்கிறீர்கள். கொஞ்ச சமயத்திற்குப் பிறகு புத்தியால் மட்டுமே சம்பந்தத்தை நினைவு செய்தீர்கள் என்றால், புத்தியில் வேறு விஷயங்கள் வருவதால் மனம் மாறி விடுகிறது. பிறகு கடின உழைப்பு செய்ய வேண்டி இருக்கிறது. பிறகு என்ன சொல்கிறீர்கள் - நாங்களோ நினைவு செய்தோம் தான். பாபா என்னுடைய கம்பேனியன் தான். ஆனால் கம்பேனியன் தமது பொறுப்பை நிறை வேற்றவில்லை. அனுபவம் எதுவும் ஏற்படவில்லை. இது புத்தியால் நினைவு செய்தீர்கள். உள்ளத்தில் அன்பை நிறைத்துக் கொள்ள வில்லை. எப்போதெல்லாம் புத்தியில் ஏதேனும் விஷயம் வருகிறதோ, அது சீக்கிரமாக வெளியேறி விடவும் செய்யும். ஆனால் மனதில் நிறைந்து விடுமானால், முழு உலகமே அதை அகற்ற விரும்பினாலும் அகற்ற முடியாது. ஆகவே சர்வ சம்பந்தங்களை சமயத்திற்கேற்றவாறு எந்தச் சமயம் எந்த சம்பந்தம் அவசியமோ, நண்பனின் அவசியம் இருக்கும் போது தந்தையை நினைவு செய்தால் மஜா வராது. எனவே எந்தச் சமயம் எந்த சம்பந்தத்தின் அனுபவம் வேண்டுமோ, அந்த சம்பந்தத் தின் அன்போடு, மனதார அனுபவம் செய்யுங்கள். பிறகு கடின உழைப்பும் தேவைப்படாது. போரடிக்கவும் செய்யாது. சதா

மனமகிழ்ச்சி இருக்கும். ஆக, இந்த வருடம் என்ன செய்யப் போகிறீர்கள்?

கடின உழைப்பிலிருந்து விடுபட வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஓ.கே. என்று மட்டும் எழுதுங்கள். வேறு எதுவும் எழுத வேண்டாம். ஓ.கே. என்றால் புரிந்து கொள்வோம் - கடின உழைப்பிலிருந்து அகன்று விட்டீர்கள் என்று. மிக நீளமான கடிதங்கள் எழுத வேண்டாம். இல்லையென்றால் கடிதமோ எழுதினோம். பதில் வரவில்லை என்று சொல்வீர் கள். உங்கள் கடிதங்கள் வந்து சேரவில்லை என்று அப்படி இல்லை. கடிதம் எழுதத் தொடங்குகிறீர்கள் என்றால் அங்கே கம்ப்யுட்டரில் முதலில் வந்து விடுகிறது. தபாலில் பின்னால் வந்து சேர்கிறது. அதே போல் பாப்தாதா இவ்வளவு நீளமான கடிதங்களை தினசரி முரளியில் அனைவர்க்கும் பதில் தருகிறார். தினந்தோறும் கடிதம் எழுதுகிறார். இவ்வளவு நீண்ட கடிதம் யாராவது எழுது கிறார்களா? ஆக, இவ்வளவு தன் சுவமான்களைப் பாருங்கள், பரமாத்மா உங்கள் அனைவரிடமும் எவ்வளவு அன்பு வைத்துள்ளார்! பரமாத்மாவுக்கு அன்பு உள்ளது. அதனால் கடிதம் எழுதுகிறார். அதாவது முரளியில் பதிலும் கொடுக்கிறார் மற்றும் அன்பு-நினைவுகளும் தருகிறார். ஏதாவது கேள்வி எழுகிறது என்றால், ஏதேனும் பிரச்சினை முன்னால் வருகிறது என்றால் முரளியில் பதில் கிடைக்கிறது. எனவே பிறகு ஒரு போதும் புகார் செய்யக் கூடாது - பதில் வரவில்லை என்று. மற்றப்படி நன்றாகச் செய்கிறீர்கள் - மனதில் என்ன விஷயம் வருகிறதோ, அதை பாபாவுக்கு முன்னால் வைக்க வேண்டும். அதாவது மனதிலிருந்து அதை வெளியேற்றி விட்டீர்கள். அதை தாராளமாகச் செய்யுங்கள். ஆனால் சார்ட் எழுதுங்கள். கடிதம் எழுதும் போது மனம் லேசாகி விடுகிறது இல்லையா? ஏனென்றால் கொடுத்து விட்டீர்கள் இல்லையா? பிறகு அடுத்த நாள் முரளியை அந்த விதியின் படி பாருங்கள் -நான் எழுதிய கடிதத்திற்கு பதில் என்ன? பதில் கிடைக்கத் தான் செய்கிறது இல்லையா? எல்லையற்ற தந்தை என்றால் கடிதமும் எல்லையற்றதாகத் தான் எழுதுவார். சிறியதாக எழுதுவாரா என்ன?

பாப்தாதா பார்த்தார் - நாலாபுறமுள்ள இரட்டை வெளிநாட்டினர் சேவையில் நல்ல ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொருவரையும் பார்க்கும் போது ஒருவர் மற்றவரை விட அன்பானவராக இருக்கிறார். பெயர் சொன்னால் எத்தனைப் பெயர்கள் சொல்ல வேண்டிய திருக்கும்? ஆக, அனைவரும் தங்களின் பெயரில் (ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில்) விசேஷ சேவைக்கான பிரதிபலனாக வாழ்த்துகளை ஸ்வீகாரம் செய்து கொள்ளுங்கள். பெயர்களைச் சொல்லத் தொடங்கினால் ஒரு மாலை உருவாகி விடும். ஆனால் மாலையின் அனைத்து மணிகளும் பாப்தாதாவின் முன்னால் இருக்கிறார்கள். ஒவ்வொரு சமயமும் சேவை எல்லையற்றதாகவும் வெற்றி நிறைந்ததாகவும் ஆகிக் கொண்டே சென்று கொண்டிருக்கிறது. நிகழ்காலத்தில் விசேஷமாக வெளிநாடுகளில் இரண்டு சேவைகளின் ரிசல்ட் நன்கு பிரத்தியட் சமாகி இருக்கின்றது. அநேக விதமான சேவைகளோ நடந்து கொண்டு தான் உள்ளன. ஆனால் விசேஷமாக ஒன்று, இந்த குளோபல் புக், முயற்சி செய்து தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு நிமித்தமாக நாலாபுறமும் விசேஷ ஆத்மாக்களின் சம்பந்தம்-தொடர்பில் வருவது சகஜமாகி விட்டது. ஆக, எந்தக் குழந்தைகள் மிகுந்த உள்ளன்போடு இதற்காகத் தங்களின் நேரத்தைக் கொடுத்தார்களோ, சகயோகம் கொடுத்தார்களோ, அதனுடைய பிரத்தியட்ச பலன் சேவைக்கு நிமித்தமாகி யிருக்கும் ஆத்மாக்களுக்கு பாப்தாதா பல கோடி

மடங்கு வாழ்த்துகள் சொல்லிக் கொண்டி ருக்கிறார்கள். மேலும் அதோடு கூடவே யாரெல்லாம் இப்போது அதற்கான உரையாடல், ரிட்ரீட் செய்திருக்கிறார்களோ, அதன் ரிசல்ட் கூட முன்பை விட நல்லதிலும் நல்லதாகவே இருந்தது. மற்ற அனைத்து தேசங்களைச் சேர்ந்தவர்களும் இதில் என்ன சகயோகம் கொடுத்துள்ளார்களோ, அவர்களுக்கும் வாழ்த்துகள். லட்சியம் நன்றாக வைத்திருக் கிறீர்கள். ஆக, நாலாபுறமும் இந்த இரண்டு வித சேவைகள் மிக விமரிசையாகச் சென்று கொண்டுள்ளன. இனிமேலும் நடந்து கொண்டே இருக்கும். பாப்தாதாவுக்கு நினைவிருக் கிறது, முதலில் வெளிநாட்டு வி.ஐ.பி.க்களையோ விடுங்கள், ஐ.பி.க்களைக் கொண்டு வருவதும் கூட கடினமாக இருந்தது. மற்ற எல்லாமே சகஜமாக உள்ளது இல்லையா? ஆக, இது சேவையின் பிரத்தியட்ச பலன். இன்னும் எத்தனைப் பேரின் ஆசிர்வாதங்கள் கிடைத்துள்ளன! யாருடைய கையில் இந்தப் புத்தகம் செல்கிறதோ, அந்த அனைவரின் ஆசிர்வாதங்கள் எந்தக் கணக்கில் சேமிப்பாகும்? நிமித்தமானவர்கள். கொடுக்கும் சேவை என்றாலும் சரி, உருவாக்கும் சேவையாக இருந்தாலும் சரி, ஐடியாவை வெளிப்படுத்து வதற்கான சேவையாக இருந்தாலும் சரி, எழுது வதற்கான சேவையாக இருந்தாலும் சரி, அனைவருக்கும் ஆசிர்வாதங்கள் கிடைக்கின்றன. ஆக, எவ்வளவு ஆசிர்வாதங்கள் கிடைத்துள்ளன? நிறைய ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன. நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளுங்கள், போதும். தனக்காகவே பிஸியாக இருக்கிறீர்கள் என்றால் ஆசிர்வாதங்கள் பெற்றுக் கொள்வதில்லை. மற்றும் யாரெல்லாம் ஐ.பி.க்கள் அல்லது வி.ஐ.பி.க்கள் தொடர்பில் வருகிறார்களோ, அதில் ஒருவர் எவ்வளவோ பேருக்கு அனுபவம் சொல்வார்களானால் அந்த அனைவரின் ஆசிர்வாதங்கள், பிராமண ஆத்மாக்களுக்கு மிக-மிக அதிகமாகக் கிடைக்கும். ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொள்வீர்களானால் கூட சம்பன்னமாகி விடுவீர் கள். புத்தகமும் நன்றாக வெளிவந்துள்ளது. இந்த நிகழ்ச்சியும் கூட மிக நன்றாக உள்ளது. மேலும் பாரதவாசிகளின் விசேஷ சேவை கார்-யாத்திரை நடந்து கொண்டிருக்கிறது. (பிஸினெஸ் விங்கின் சகோதர-சகோதரிகள் 11 கார்களின் ஒரு ரேலி ராஜ்கோட்டில் இருந்து பாம்பே வரை செல்வதற்குப் புறப்பட்டுள்ளது. அதன் மூலம் அநேகவித சேவைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன) அதனுடைய ரிசல்ட்டும் மிக நன்றாக வெளிவந்து கொண்டி ருக்கிறது. இதையடுத்து ஒருவர் நிமித்தமாகி விட்டாலும் கூட அநேகருடைய பாக்கியத்தை விழிப்படையச் செய்து கொண்டே இருப்பார். ஆக, இதுவும் கூட சேவையின் நல்ல ரிசல்ட்டாகக் காணப்படுகிறது. யாரெல்லாம் இந்த சேவைக்கு நிமித்தமாக இருக்கிறார்களோ, ஊக்கம்-உற்சாகத்தில் முன்னேறிக் கொண்டு இருக்கிறார்களோ, அவர்கள் அனைவருக்கும் கூட, நாலாபுறத்திலும் உள்ள பாரதவாசிக் குழந்தைகளுக்கு, சகயோகி குழந்தைகளுக்கு, நிமித்தமாக உள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா வாழ்த்து சொல்கிறார்கள். முயற்சி பெயரளவுக்கு மற்றும் வெற்றி அதிகம் - இப்போது அத்தகைய சேவைக்கான பிளான் உருவாக்குங்கள். இந்த சேவையிலும் கூட முயற்சி குறைவு, ரிசல்ட் அதிகம் காணப்படுகிறது. அதே போல் வெளிநாடு களின் இரண்டு நிகழ்ச்சிகளிலும் அப்படியே உள்ளது. நல்லது.

தேசத்திலும், வெளி தேசங்களிலும் உள்ள சேவையில் முன்னேறிக் கொண்டுள்ள, களைப்பற்ற வராகி மற்றவர்களுக்கு தானம், வரதானம் கொடுக்கக் கூடிய ஆத்மாக்கள் அனைவர்க்கும், நாலாபுறம் உள்ள பாபாவின்

சர்வ சம்பந்தளின் அன்பில் மூழ்கி இருக்கக்கூடிய லவ்லீன் ஆத்மாக்களுக்கு, சதா சகஜ அனுபவம் செய்கிற, மற்றவர்களுக்கும் சகஜ அனுபவம் செய்விக்கிற சகஜயோகி ஆத்மாக்களுக்கு, சதா தன்னை சுவமான் மூலம் சகஜமாக தேக உணர்விலிருந்து விடுவிக்கக் கூடிய மற்றும் துணைவரின் அனுபவம் செய்யக்கூடிய சமீப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்தே.

வரதானம் : தன்னுடைய ஆதி மற்றும் அந்தம், இரண்டு சொரூபங்களையும் முன்னால் வைத்து, குஷி மற்றும் நஷாவில் இருக்கக் கூடிய ஸ்மிருதி சொரூபம் ஆகுக.

எப்படி ஆதி தேவர் பிரம்மா, ஆதி ஆத்மா ஸ்ரீகிருஷ்ணர் இருவருக்கிடையிலுள்ள வேறு பாட்டைக் காட்டினாலும் இருவரையும் சேர்த்துக் காட்டுகிறீர்கள். அது போல் நீங்கள் அனைவரும் தங்களின் பிராமண சொரூபம் மற்றும் தேவதா சொரூபம் இரண்டையும் முன்னால் வைத்தவாறு பாருங்கள் - ஆரம்பத்திலிருந்து கடைசி வரை நாம் எவ்வளவு சிரேஷ்ட ஆத்மாக்களாக இருந்திருக்கிறோம்! அரைக்கல்பம் இராஜ்ய பாக்கியத்தை அடைந் திருந்தோம் மற்றும் அரைக்கல்பம் மதிப்பிற்குரிய, பூஜைக்குரிய சிரேஷ்ட ஆத்மா ஆனோம். ஆக, இதே நஷா மற்றும் குஷியில் இருப்பதன் மூலம் ஸ்மிருதி சொரூபம் ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: யாரிடம் ஞானத்தின் அளவற்ற செல்வம் உள்ளதோ, அவர்களுக்கு நிறைவின் (சம்பன்னதா) அனுபவம் இருக்கும்.